போட்டி போட்டு உயருகிறது பெரிய வெங்காயம் விலை!

தக்காளி கிலோ ரூ.60க்கு விற்பனை - தொடர்ந்து விலை அதிகரிப்பு!

கடும் அதிர்ச்சியில் இல்லத்தரசிகள்!

சென்னை, அக். 6- சமையலில் முக்கிய பங்கு வகித்து வரும் தக்காளி விலை தொடர்ந்து அதிகரித்துவருகிறது. கிலோ ரூ.60க்கு விற்பனையாவதால் இல்லத்தரசிகள் அதிர்ச்சிடைந்துள்ளனர். தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 2 மாதமாக அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கடுமையாக அதிகரித்து வருகிறது. இதனால், பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். தொடர் விலை அதிகரிப்பால் ஒவ்வொரு குடும்பத்திலும் பட்ஜெட்டில் அதற்காக கூடுதல் பணம் ஒதுக்கும் நிலைக்கு இல்லத்தரசிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தக்காளி விலை அதிரடியாக உயரத் தொடங்கியுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் இருந்து தினசரி 60 வாகனங்களில் இருந்து 1,300 டன் தக்காளி வருவது வழக்கம். ஆனால், கடந்த சில நாட்களாக தக்காளி வரத்து என்பது குறைந்து வருகிறது. இதனால், தக்காளி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நேற்று தக்காளி வருகை பாதியாக குறைந்தது. அதாவது 35 லாரிகளில் மட்டுமே தக்காளி விற்பனைக்காக வந்தது. வரத்து குறைவால் தக்காளி விலை அதிரடியாக உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ தக்காளி ரூ.40க்கு விற்பனையானது. மொத்த மார்க்கெட்டில் தான் இந்த விலை. ஆனால், வெளி மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.60க்கு விற்பனையானது. இந்த விலை உயர்வு இல்லத்தரசிகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

இதுகுறித்து இல்லத்தரசிகள் கூறுகையில், "கிலோ ரூ.5க்கு விற்ற தக்காளி தற்போது பல மடங்கு ஏறி உள்ளது. தக்காளிக்கு மட்டுமே இவ்வளவு விலை என்றால் மற்ற காய்கறிகளை எப்படி வாங்க முடியும். நடுத்தர குடும்பத்தினருக்கு தக்காளி விலை உயர்வு என்பது சிரமம் தான்" என்றனர். வறட்சி காரணமாக தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் கூறியுள்ளனர்.

வரும் நாட்களில் தக்காளி வரத்து குறையும் பட்சத்தில் தக்காளி விலை மேலும் அதிகரிக்க தான் வாய்ப்பு உள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதேபோல பெரிய வெங்காயமும் விலை உயர்ந்து வருகிறது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ வெங்காயம் தரத்தை பொறுத்து கிலோ ரூ.60 வரை விற்கிறது. வெளிமார்க்கெட்டில் கிலோ ரூ.80 வரை அதிகரித்துள்ளது.

பழனிசுப்பிரமணியன் தலைமை! நெல்லை மாவட்டம் – வி.கே.புரம்

திராவிடப் பஞ்சாலை தொ.மு.ச. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்பு!

நெல்லை.அக்.6. நெல்லை மாவட்டம் வி.கே.புரம் அம்பு சிதம் பரம் திருமண மஹாலில் திராவிடப் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்க (மாநாடு) மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் தி.ப.தொ.மு. தலைவரும் 5 வது வார்டு செயலாளர் வி.பழனிசுப்பிரமணியன் தலைமையில் வி.கே.புரம் நகரச் செயலாளர் கணேசன் நகர்மன்ற தலைவர் செல்வ சுரேஷ் பெருமாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தி.ப.தொ.மு.சங்கம் பொதுச் செயலாளர் ஒன்றிய செயலாளர் பரணி ஆர்.சேகர் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.

நிகழ்வில் தொ.மு.ச. பேரவை அமைப்பு செயலாளர் தர்மன், தொழில் நுட்ப அணி பேச்சியம்மாள், சங்க நிர்வாகிகள் சேசுதாஸ், தென்னரசு, முருகன், செல்வம், பாலகிருஷ்ணன், துரைமுருகன், மாரியப்பன், பாலாஜி, சுப்பு, துரை, வாசு, செல்வராஜ், ஷேக் சையது அலி, காளிதாஸ், லாரன்ஸ், பூல்பாண்டியன், குமரன், சிற்பானந்த், கார்த்தி, வள்ளி, ரஞ்சித் குமார், சீனிவாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த நலத் திட்டங்கள் இன்றும் மக்கள் பயன்பெறும் அளவில் நடைமுறையில் இருப்பதற்கு காரணமான கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் இக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் வெற்றி பெற்று தமிழக மக்களுக்காக சட்டமன்றத்தில் குரல் கொடுத்து அவைகுறிப்பிலிருந்து நீக்க முடியாத அளவிற்கு கம்பீரமாக பேசும் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்க் கட்சித் தலைவராக தேர்ந்தெடுத்த தற்கு இக்கூட்டம் மனதார வாழ்த்துகிறது.

ஒன்றிய அரசே, பா.ஜ.க. அரசே தொழிலாளர் விரோத 4 சட்டங்களை திரும்பப் பெற இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தமிழக அரசே த.வெ.க. அரசே மின் வழித்தடத்தை தனியாருக்கு தாரை வளர்ப்பதை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நமது ஆலையின் சீனியர் தொழிலாளர்கள் நிறைய பேர் ஓய்வு பெற்று சென்று விட்டார்கள். வரும் காலத்தில் நிறைய பேர் ஓய்வு பெற இருப்பதால் வாரிசுக்கு வேலைக்கு வந்த ஜூனியர் தொழிலாளர்களை வேலை பார்ப்பவர்களை சீனியர் கேட்டகிரிக்கு மாற்றி அதற்கான சம்பள உயர்வையும் கொடுக்க வேண்டும் எனவும்.

அரசு துறையில் இருக்கும் பணி ஓய்வு வரும் 60 வயது போல் நமது ஆலையில் விருப்பப்படும் தொழிலாளர்கள் ஓய்வு பெறும் வயதை 58 இல் இருந்து 60 ஆக உயர்த்த வேண்டும் என ஆலை நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறோம்.

நமது ஆலை ஆண், பெண் தொழிலாளர்களுக்கு 5 வகையாக கேட்டகிரி பிரிக்கப்பட்டு சம்பள வித்தியாசமாக வழங்கி வருகின்றது. இதனை வரக்கூடிய 2027 சம்பள உயர்வு பேச்சுவார்த்தையில் சீனியர், ஜூனியர் என இரண்டு கேட்டகிரியாக மாற்றி சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டும் என வும்.

ஆண், பெண் தொழிலாளர்கள் நிரந்தர வேலைக்கு சேர்ந்து பணி நிரந்தரம் செய்யும் கால அளவான 2 1/2 வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் கன்பார்ம் செய்யாமல் காலம் தாழ்த்தும். நிர்வாகத்தை உடனடியாக இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறது.

சங்க நிர்வாகிகளாக இருந்தவர்கள் பெரும்பாலும் 58 வயது முடிந்து பணி ஓய்வு பெற்றுள்ளதாலும் நமது ஆலையில் வேலை செய்யும் பெண் தொழிலாளர் களையும் சங்கத்தில் சேர்த்து இருப்பதால் இனி வரும் காலங்களில் ஆண், பெண் தொழிலாளர்களையும் தற்சமயம் நடைமுறையில் செயல்பட்டு வரும் நிர்வாகிகளுடன் இணைந்து செயல்படு வார்கள் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

SIR குளறுபடிகளுக்கு எதிரான

சி.ஜே.பி.யினர் ஆர்ப்பாட்டத்திற்கு தி.மு.கழகம் முழு ஆதரவு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.6- தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கினங்கவும், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் தி.மு.க. மாணவர் அணி (02.10.2026) இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்களை பதவி விலகக் கோரி கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (CJP) நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக மாணவர் அணியின் சென்னை மண்டலப் பொறுப்பாளர், மாணவர் அணித் துணைச் செயலாளர் தமிழ் கா. அமுதரசன் தலைமையில் சென்னை மாவட்ட அமைப்பாளர்கள் பி. அருண் குமார், எம்.எம். செந்தில், பகுதி மாணவர் அணி அமைப்பாளர்கள் வினோத், கிஷோர் மற்றும் தமிழ்



மாணவர் மன்ற உறுப்பினர்கள் அனுசல்யா, ஸ்ரீஹரி மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்வே சந்தேகம்:

தலைமைத் தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்கும் குழுவிலிருந்து இந்தியத் தலைமை நீதிபதி நீக்கப்பட்டு, அந்த இடத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமர்த்தப்பட்டார். இந்தப் புதிய சட்டத்தின் கீழ் முதன்முதலில் நியமிக்கப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்கள்

ஆணையத்துக்குள்ளேயே எதிர்ப்பு:

சக ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி இருவரும் பத்து மாதங்களில் குறைந்தது 14 முறை மாற்று கருத்து தெரிவித்தும் புறக்கணிக்கப்பட்டனர் என்கிறது இந்தியன் எக்ஸ்பிரஸ். "தன்னிச்சையாகவும் ரகசியமாகவும் செயல்பட்டது இந்திய ஜனநாயகத்தின் மீதான மிக மோசமான தாக்குதல் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தார் என்பது குறிபிடத்தக்கது.

SIR நடந்த மூன்று மாநிலங்களிலும் ஆட்சி மாறியது!

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம். "இது வெறும் தற்செயல் அல்ல; தெளிவான திட்டம் போல தெரிகிறது என்று CJP நிறுவனர் அபிஜித் திப்கே கூறுகிறார்.

கேரள முன்னாள் தலைமைச் செயலாளர் சொல்வது என்ன?

2019 மக்களவைத் தேர்தலில் பத்தனம்திட்டாவில் பா.ஜ.க. சார்பில் போட்டியிடுமாறு, பணியில் IAS அதிகாரியாக இருக்கும் ஞானேஷ் குமார் தன்னிடம் கூறியதாக கேரள முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி.ஜி. தாம்சன் தெரிவித்துள்ளார்.

ஞானேஷ் குமார் அவர்கள் நடுநிலையுடன் செயல்பட வேண்டிய இந்திய தலைமை தேர்தல் ஆணையரா? அல்லது ஆளும் பாசிச பா.ஜ.க. அரசின் கைபாவையா?

நாங்கள் கேட்பது ஒன்றே: ஞானேஷ் குமாரே, பதவி விலகு!

வாக்குரிமையைத் திருடியவர்கள் வரலாற்றில் வென்றதில்லை.

ஜனநாயகத்தைக் காக்க இளைஞர்களே, மாணவர்களே மற்றும் கழகத் தோழர்களே! அணிதிரள்வோம்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் துள்ளிக் குதிப்பது ஏன்?

நேற்று முன்தினம் நடந்தது ரெண்டே ரெண்டு விஷயம் தான்.

ஒன்று முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய தாராபுரம் ரோட் ஷோவும், அதைத்தொடர்ந்தான பிரம்மாண்ட பொதுக்கூட்டமும்.

இரண்டாவது, மதுராந்தகத்தில் நடிகர் விஜய் கலந்து கொண்ட ஏழு மணி நேர ரோட் ஷோ.

இரண்டாவது நிகழ்வு என்பது அட்டர் ஃப்ளாப் என்பதை அவர்கள் தரப்பு ஊடகங்கள் வெளியிட்ட வீடியோக்களிலேயே, கூட்டம் இல்லாமல் பெரும்பான்மையான இடங்களில் சென்ற நடிகர் விஜய்யின் ஊர் மக்கள் இல்லாத ஊர்(தி)வலம்.

இது ஃப்ளாப் ஆனதால், முன்னாள் முதல்வரின் தாராபுரம் எழுச்சிப் பரப்புரைக்கான பலனை கெடுப்பதற்காக, நெட்டகாலன் அன் கோ கட்டமைத்த பிரச்சாரம் தான்.

திமுக தலைவர் பெண் வேட்பாளரை உருவகேலி செய்து விட்டார். அவமானப்படுத்தி விட்டார். மனதைப் புண்படுத்திவிட்டார் போன்ற அர்த்தமற்ற பரப்புரைகள்.

சட்டமன்றத்திலேயே நடிகர் விஜய் திமுக தலைவரை காணோம் என்று தேடியதையும், மிசா கைது விவகாரத்தில் உருவகேலி செய்து காட்டிப் பேசியதையும் ஏற்றுக்கொண்ட இந்த சமூகம், அதையெல்லாம் பொருதுபடுத்தாத இந்த ஊடகங்கள், இப்போ மட்டும் துள்ளிக்குதிப்பது ஏன்?

அவர் அப்படித்தான் அவர் பேசலாம், அதேபோல நீங்க பேசலாமா?! நீங்க எவ்ளோ நல்லவர், நேர்மையானவர், நாகரீக அரசியல் செய்பவர், அடக்கமாக செயல்படுபவர். உங்களிடம் இதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இப்படியாகவெல்லாம் வரும் ரைட்டப்புகள்... நெரேடிவ்ஸ் அதே சமயம் பெண்களை தனது அத்தனை படங்களிலும் அவதூறாகவும், அறுவெறுக்கத்தக்க வகையிலும் காட்சிப்படுத்தி ஏதோ பெரிய சாகஸமாகக் காட்டியதையும் பேராசிரியராக இருந்தாலும் குடித்துவிட்டு கல்லூரிக்கு வரலாம் என்ற புதிய சித்தாந்தத்தை எல்லாம் கற்றுக்கொடுத்த நடிகர் விஜய் பற்றிக் கேட்டால், அதெல்லாம் சினிமா என்று மடைமாற்றம் செய்வதும். ஒரு நல்ல தலைவன் நாட்டுக்காக உழைக்க வரும் தலைவன் தன் துவக்க காலப் படங்களில் அப்படி இப்படி இருந்தால் கூட பரவாயில்லை, ஆனால் தன்னை பொது வாழ்க்கைக்கும் அரசியல் வாழ்க்கைக்கும் தயார்படுத்திக் கொள்ளும் ஒரு தலைவன் அதன் பிறகு நடிக்கும் படங்களில் உச்சக்கட்ட நேர்மையையும், நல்லொழுக்கத்தையும் அல்லவா போதித்திருக்க வேண்டும்?

அவரை கண்மூடித்தனமாக நம்பும், ரசிக்கும் ரசிகர்களை நல்வழிப்படுத்துவதாகத் தானே அவரது திரைப்படக் காட்சிகள் அமைந்திருக்க வேண்டும்? அதை விடுத்து இன்றைக்கு கண்டபடி பேசித்தீரியும் ஒரு கண்மூடித்தனமான முட்டாள் கூட்டத்தை ரசிகர்கள் என்ற பெயரில் உருவாக்கி, தமிழ்ச் சமூகத்தையே கேலிக்குறியதாக மாற்றியமைத்திருக்கும் நடிகர் விஜய் பற்றி கேட்கத் துப்பில்லாத ஜென்மங்கள் தி.மு.க. தலைவர் பற்றிப் பேசுவதற்கு எந்த அருகதையும் அற்றவர்களாவார்கள். விஜய் தான் அப்படின்னு எல்லாருக்கும் தெரியும், நல்லவராக இருந்த இவர் ஏன் அப்படி மாற வேண்டும் என்பது சிலரது வாதம்.

ஐயா... அவர் நல்லவராக இருந்து, நாகரீகமாக நடந்து கொண்டு, மக்களைப் பற்றியும், மாநிலத்தைப் பற்றியும் மட்டுமே சிந்தித்து தன் சக்திக்கு மீறி கடுமையாக உழைத்த போது நீங்கள் எல்லாம் என்ன செய்தீர்கள்? அவரை விமர்சிக்காமல் இருந்தீர்களா? அல்லது நடிகர் விஜயை தூக்கிப் பிடிக்காமல் தான் இருந்தீர்களா?

இல்லையே?

ஆனால் அப்படிச் செய்த விஜய்க்கு ஆதரவாகத்தானே அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி பெரும்பான்மையான மூத்த, பத்திரிகையாளர்கள் எல்லாம் எழுதியும் பேசியும் திரிந்தீர்கள்; திரிகின்றீர்கள்?

மக்களும் இது போன்ற நாகரீகமான செயல்களுக்கு, பேசுக்களுக்கு, நடவடிக்கைகளுக்கு மதிப்புத் தரும் மனநிலையில் இல்லையே? அப்படி செயல்படுபவர்களை கிரிஞ் என்றும், பூமர் என்றும் அல்லவா ஒதுக்கி வைக்கின்றார்கள்?!

ஜனநாயகத்தில் ஆட்சியின் அவலம் என்பது மக்கள் மனநிலையின் பிரதிபலிப்புத் தான் என்பதை இப்பொழுது தான் திமுகவும், அதன் தலைவரும், பொதுச் சமூகமும் உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.



சௌமியன் வைத்தியநாதன்
கழக இலக்கிய அணி
துணைச் செயலாளர்

படிச்சவன் சூதும் வாதும் செய்தால் போறவன் போவான், ஐயோன்னு போவான்னு பாரதி சொன்ன மாதிரி இப்போ உங்களுக்கு எல்லாம் தலைவர் ஸ்டாலின் பேசியது குத்துது குடையுது என்றால் அதற்கு திமுகவோ அல்லது அதன் தலைவரோ எந்தவிதத்தி லும் பொறுப்பேற்க முடியாது.

நடிகர் விஜய் மற்றும் அவரது கட்சியினரின் அசிங்கங்களை, அயோக்கியத்தனங்களை, பொய்யுரைகளை கண்டு கொள்ளாத மக்கள் திமுக தலைவர் மூன்று வினாடிகள் ஒரு ஃப்ளோவில் பேசியதை மட்டும் கண்டு கொண்டு தண்டிக்கப் போகின்றார்களா என்ன?

ஆகவே தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இப்பொழுது தான் மக்களுக்குப் புரிந்த மொழியில் பேசியிருக்கின்றார். இனிமேல் தான் மக்கள் அவரைக் கொண்டாடுவார்கள்.

தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர் விரட்டி அடிக்கப்பட்ட ஒரு ஜனநாயக விரோதியை, பல்டி வேட்பாளரை மக்கள் மனநிலையில் இருந்தே தலைவர் ஸ்டாலின் பேசியிருக்கின்றார். அதை அம்மக்களும் வரவேற்கின்றனர்.

த.வெ.க. வெற்றிபெற வாய்ப்பில்லாத நிலையில், இது போன்ற உப்புச்சப்பில்லாத விஷயங்கள ஊதிப் பெரிதாக்கி குளிர்காய நினைத்தால், மக்கள் கொடுக்கப் போகும் அடி த.வெ.க.வுக்கும் நடிகர் விஜய்க்கும் மட்டுமல்லாது இந்த நடுநிலை வாந்திகளுக்கும் சேர்த்தே கிடைக்கும்.

கோடிக்கணக்கில் தேர்தல் செலவு!

த.வெ.க. வேட்பாளர் பெயரில் சேர்க்க வேண்டும்!

தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க. புகார்!

சென்னை, அக்.6- தவெக முழுக்க முழுக்க தோல்வி ஜுரத்தில் இருப்பதால் பல லட்சம் செலவு செய்கிறது. அங்கு முதல்வர் வரும்போது வைக்கப்படும் கொடி, பேனர், பேரிகார்டு செலவுகளை வேட்பாளர் கணக்கில் சேர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் திமுக புகார் அளித்துள்ளது. திமுக மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ நேற்று சென்னை, தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கை சந்தித்து ஒரு புகார் மனு அளித்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

திமுக சார்பாக மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தல் குறித்து இன்றைக்கு தேர்தல் கமிஷனிடம் புகார் ஒன்று கொடுத்திருக்கிறோம். இந்த புகாரில் தாராபுரத்திலும், மதுராந்தகத்திலும் தோல்வி பயத்தினால் தவெக அரசு எப்படி அரசாங்க ஊழியர்களையும், அந்த நிர்வாகத்தையும் துஷ்பிரயோகம் செய்து இடைத்தேர்தலில் எப்படியாவது வென்று விடலாமா என்பதை நினைக்கிறார்கள் என்பது குறித்தான புகாரை அளித்திருக்கிறோம்.

குறிப்பாக மதுராந்தகத்தில் தவெக வேட்பாளர் தன்னுடைய பிரசாரத்தின் போது அரசு ஊழியர்களை, பொதுப் பணித்துறை ஊழியர்களை வாக்காளர்களுக்கு முன்பாகவே வைத்து உடனடியாக இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று அரசாங்க ஊழியர்களை தன்னுடைய பிரசாரத்திற்காக பயன்படுத்தி இருக்கிறார். இது மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி தவறான நடவடிக்கையாகும்.

இதை மிகவும் அப்பட்டமாக வெளிப்படையாக எந்த தயக்கமும் இல்லாமல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தும் அரசாங்கத்தினுடைய ஊழியர்களை தன்னுடைய வெற்றிக்காக தவெக அரசு உபயோகிக்கபடுத்துகிறது என்பதை நாங்கள் வீடியோ பதிவுகளை ஆதாரமாக கொடுத்து புகார் கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தமிழக முதல்வர் 2ம் தேதி மதுராந்தகத்தில் பிரசாரம் செய்யும்போது அன்றைக்கு மட்டும் ஏறக்குறைய 20 லட்ச ரூபாய்க்கும் மேலாக செலவு செய்யப்பட்டிருக்கிறது.

கொடிகள், பேனர்கள், பேரிகார்டு என எல்லாவற்றையும் வரம்பு மீறிய செலவாக தவெக வேட்பாளர் செய்திருக்கிறார். ஒரு கட்சியினுடைய தலைவர் பிரசாரம் செய்யும்போது அந்த மேடைக்கு உண்டான செலவுகளும், அவருடைய பயணச் செலவுகளும் மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. மற்றபடி இந்த கொடி, பேனர் மற்றும் பேரிகார்டு ஆகியவற்றை பல லட்சக்கணக்கான செலவில் செய்திருப்பதால் அது வரையறுக்கப்பட்ட 40 லட்ச ரூபாய்க்கு மேலாக இருக்கிறது.

இந்த செலவு தொகையை மதுராந்தகம் வேட்பாளருடைய பெயரில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாராபுரத்தை பொறுத்தவரை தொகுதி முழுக்க தமிழக முதல்வர் மற்றும் வேட்பாளருடைய புகைப்படங்கள் அச்சிடப்பட்ட டிபன் கேரியர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வெறும் டிபன் கேரியர் தானா என்று பார்த்தால் அப்படி அல்ல. இன்றைக்கு அந்த டிபன் கேரியரில் ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.10,000 வைத்து கொடுக்கப்படுவதாக அங்கு இருக்கக்கூடியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

எனவே தேர்தல் கமிஷன் தன்னுடைய மேற்பார்வையாளர்கள் அனைவரையும் வைத்து தாராபுரம் தொகுதியை பொறுத்தமட்டிலும் அதிக கண்காணிப்பை மேற்படுத்த வேண்டும். அமைச்சர் ஆதவ அர்ஜுனா 28ம் தேதி மதுராந்தகத்தில் பேசும்போது எதிர்க்கட்சி தலைவர் அவருடைய பற்றியும், அவருடைய தனிப்பட்ட விவகாரங்களை பற்றி பொய்யான, அவதூறான, அனைவரும் முகம் சுழிக்கும் வகையில் பேசியிருக்கிறார். அது தேர்தல் நடத்தை நிதிமுறைக்கு எதிராக இருப்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னையிலிருந்து மதுரை நோக்கிச் சென்ற தனியார் ஆம்னி பேருந்து விபத்து!

உளுந்தூர்பேட்டை அருகே சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது!

உளுந்தூர்பேட்டை, அக். 6- சென்னையிலிருந்து தனியார் ஆம்னி பேருந்து, 35க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு மதுரை நோக்கிச் சென்ற கொண்டிருந்த நிலையில், இன்று அதிகாலை உளுந்தூர்பேட்டை அருகே சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இன்று அதிகாலை உளுந்தூர்பேட்டையை அடுத்த பாதூர் அருகே பேருந்து சென்று கொண்டிருந்த போது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 30க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தகவல் அறிந்த தும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருநாவலூர் காவல் நிலைய போலீசார் மற்றும் போக்குவரத்துக்கு போலீசார் விபத்தில் படுகாயமடைந்தவர்களை மீட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தின் காரணமாக அதிகாலையில் சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான பேருந்தை கிரேன் மூலம் அப்புறப்படுத்தும் பணியில் போலீசார் ஈடுபட்டனர். இந்த விபத்து குறித்து திருநாவலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.